அதுமட்டுமல்ல; மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கு 100 யூனிட்டிற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்திருக்கின்ற தொகை யூனிட் ஒன்றுக்கு ரூ.2.60. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்குகிற மானியம் ரூ.1.60. அதனால், நுகர்வோர்கள் யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய்தான் கட்டுகிறார்கள்.

அதேபோல, 200 யூனிட் வரை பயன்படுத்தும் பயனீட்டாளர்களுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்திருக்கின்ற கட்டணத் தொகை, யூனிட் ஒன்றுக்கு ரூ.2.80. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியமாக வழங்குவது ரூ.1.30. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், நுகர்வோர்கள் யூனிட் ஒன்றுக்குக் கட்ட வேண்டியது ரூ.1.50 மட்டும்தான். ஆகையினாலே, இந்த வகையிலே மட்டும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்காக மானியமாக ரூ.355.84 கோடியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வழங்குகின்றது. அதேபோன்று 200 யூனிட் வரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அந்த வகையில் பயனீட்டாளர்களுக்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 691.81 கோடி ரூபாயை மானியமாக வழங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சாதாரண ஏழையெளிய மக்கள், நடுத்தர மக்கள், அவர்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பு முயற்சி எடுத்து, தாய் உள்ளத்தோடு இந்தச் சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

சுகாதார கிராமங்கள் திட்டத்தின்கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான மாநில அரசின் மானியத் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 26]

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூய்மை என்பது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல், மாசுமறுவற்ற காற்றும், தூய்மையான குடிநீரும் கிடைக்கும் வண்ணம் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும். இந்த நிலையை அடைவதற்கான அடிப்படைத் தேவை நாட்டில் நல்ல சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்குவதே ஆகும்.

இந்தச் சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியின்மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய தூய்மையான கிராம இயக்கம் என்ற ஒரு திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2003 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, திறந்த வெளியில் மலம் கழித்தலைத் தடுத்தல், மழைநீர் சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், தனி நபர் இல்லங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திறந்த வெளி மலம் கழித்தலை அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின்மூலம் நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இந்தத் திட்டத்தின்மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாயின. ஆனால், பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக, இந்தத் திட்டம் 2006–2007 ஆம் ஆண்டு முதல் தி.மு.க. அரசால் செயல்படுத்தப்படவில்லை. நான் மீண்டும் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு உத்தரவிட்டேன்.

மேலும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மகளிர் பொதுச் சுகாதார வளாகங்கள், 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சரிவரப் பராமரிக்கப்படாததால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததைக் கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 170 கோடி ரூபாய் செலவில், (மேசையைத் தட்டும் ஒலி) 12,793 மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்பட்டன. தற்போது இந்த மகளிர் வளாகங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 26

சுகாதார கிராமங்களை உருவாக்கும் வண்ணம், "முழு சுகாதாரத் திட்டத்தின்" கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. தற்போது ஒரு இல்லத்திற்கான தனி நபர் கழிவறை கட்டும் பொருட்டு, மத்திய அரசின் சார்பில் 2,200 ரூபாயும், மாநில அரசின் சார்பில் 1,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதில் பயனாளியின் பங்குத் தொகை 300 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 3,500 ரூபாய் செலவில் தனி நபர் இல்லக் கழிவறை கட்டப்படுகிறது.

தற்போது தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள 3,500 ரூபாய் என்பது போதுமானதாக இல்லையென்றும், இந்தத் தொகையை வைத்து, தனி நபர் இல்லக் கழிப்பறையை முழுமையாக அமைத்திட இயலாது என்றும், இந்தத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனி நபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, மாநில அரசின் பங்கு 2,500 ரூபாய் எனவும், மத்திய அரசின் பங்கு 2,200 ரூபாய் எனவும், பயனாளியின் பங்கு 300 ரூபாய் எனவும் இருக்கும். இதன்படி, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை 5,000 ரூபாய் என உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசின் இந்த நடவடிக்கையின்மூலம், தமிழ்நாடு முழுவதும் சுகாதார கிராமங்கள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

5. சுகாதார கிராமங்கள் திட்டத்தின்கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கான மாநில அரசின் மானியத் தொகை உயர்வு குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*